Singapore Examinations and Assessment Board

Singapore–Cambridge General Certificate of Education
Advanced Level (2026)

# Higher 2
# Tamil Language and Literature
# உயர்தரம் 2
# தமிழ்மொழி, இலக்கியம்
# (Syllabus 9577)

(First Year of Examination in 2026)

© MOE 2026

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பாடத்திட்ட நோக்கங்கள் | **3** |
| மதிப்பீட்டு நோக்கங்கள் | **5** |
| தேர்வு அமைப்புமுறை | **6** |
| தேர்வு விவர அட்டவணை | **9** |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | **10** |
| கருத்துரை எழுதுதல் மதிப்பீட்டுத் திட்டம் | **12** |
| இலக்கியத்திற்குரிய மதிப்பீட்டுத் திட்டம் | **13** |

## பாடத்திட்ட நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகப் புகுமுகநிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு 21-ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான முக்கியத் திறன்களாகிய இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் மாணவர்களிடம் வளர்த்தலாகும். எனவே, பல்கலைக்கழகப் புகுமுகநிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் பின்வரும் கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

<u>**மொழித்திறன்கள்**</u>

**பேசுதல்**

- நடப்பு விவகாரத்தையொட்டியோ நிகழ்வையொட்டியோ தம் கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்
- பல்வேறு தலைப்புகளில் தம் கருத்துகளைப் பொருத்தமான சொல்வளத்தைப் பயன்படுத்திச் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் விளக்குதல்
- பல்வேறு பனுவல்களின்வழிப் பெறும் கருத்துகளைத் தம் வாழ்க்கை அனுபவங்களோடு பொருத்திப்பார்த்துக் கருத்துரைத்தல்

**பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- பல்வேறு பனுவல்களின்வழிப் பெறும் கருத்துகளைச் சீர்தூக்கி ஆய்ந்து தம் வாழ்க்கை அனுபவங்களோடு பொருத்திப்பார்த்துக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுதல்
- பொதுவான தலைப்புகளில் தம் கருத்துகளைச் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பரிமாறிக்கொள்ளுதல்

**படித்தல்**

- செய்தித்தாள்கள், இதழ்கள், கதை நூல்கள், நாவல்கள், கட்டுரைகள், உரையாடல்கள், கவிதைகள் முதலிய பல்வேறு பனுவல் வகைகளைப் படித்துப் பகுத்தாய்ந்து தம் புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்
- பல்வேறு தலைப்புகளில் அமைந்த பனுவல்களின் கருத்துகளைப் படித்துப் புரிந்துகொண்டு விளக்குவதோடு தம் கருத்துரைப்பையும் வழங்குதல்

**எழுதுதல்**

- கருத்துகளுக்குத் தக்கவாறு சான்றளித்தும் காரணகாரிய வகையில் ஆராய்ந்து நிகழ்வுகளையும் அனுபவங்களையும் விளக்கியும் எழுதுதல்
- பொருத்தமான சொற்களையும் பலதரப்பட்ட வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தித் தம் கருத்துகளையும் அனுபவங்களையும் விளக்கி எழுதுதல்

**எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- மின்னஞ்சல், கருத்துக்களம், வலைப்பூ முதலான அமைப்புமுறைகளில் அமைந்த பனுவல்களையொட்டித் தம் கருத்துகளையும் உணர்வுகளையும் எடுத்துக்காட்டுகளுடன் தெளிவான மொழிநடையிலும் பொருத்தமான சொற்களையும் பலதரப்பட்ட வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

**இலக்கியத்திறன்கள்**

- இலக்கிய வடிவங்களான கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் ஆகியவற்றைப் படித்துப் போற்றுதல்

- இலக்கியப் பனுவல்களிலுள்ள இலக்கியக்கூறுகளைப் புரிந்துகொண்டும் அவற்றிலுள்ள அழகியல் தன்மைகளை அடையாளங்கண்டு போற்றியும் ஒவ்வோர் இலக்கியப் படைப்பிலும் தனித்து விளங்கும் எழுத்தாளரின் மொழி ஆளுகையை உரிய கண்ணோட்டத்தில் துருவி ஆராய்ந்தும் பார்த்தல்

- பனுவல்களில் வெளிப்படும் மையக்கருத்துகளையும் சிக்கல்களையும் ஆராய்ந்து தம் புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

- பனுவல்களின்வழி வெளிப்படும் கருத்துகளைத் தம் வாழ்க்கை அனுபவங்களோடு பொருத்திப் பார்த்தல்

- பனுவல்களில் வெளிப்படும் கருத்துகளைப் பல்வேறு கோணத்தில் பார்ப்பதன் மூலமாக அவர்கள் தங்கள் சொந்த விழுமியங்கள், பார்வைகள், அடையாளங்கள் ஆகியவற்றை மேம்படுத்திக்கொள்ளும் விழிப்புணர்வைப் பெறுதல்

- சொந்தப் படைப்புகளை உருவாக்குபவர்களாகவும் தங்களுக்கெனத் தனித்துவமிக்க எழுத்துநடையைக் கொண்டவர்களாகவும் தங்களை வளர்த்துக்கொள்ளுதல்

## மதிப்பீட்டு நோக்கங்கள்

பல்கலைக்கழகப் புகுமுகநிலையில் பயிலும் மாணவர்கள் கற்றல், கற்பித்தலின்வழிப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்களாகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

**மொழித்திறன்கள்**

**படித்தல்**

- பல்வேறு பனுவல்களை ஆழ்ந்து படித்துத் தம் புரிந்துணர்வை வெளிப்படுத்தும் வகையில் வினாக்களுக்கு விடையளித்தல்
- பனுவல்களில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களுக்கு இடம்நோக்கிப் பொருள் எழுதுதல்

**எழுதுதல்**

- கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புக்கேற்ற கருத்துகளைத் தெளிவாகவும் தக்க சான்றுகளுடன் விரிவாகவும் கருத்து வளர்ச்சியுடனும் எழுதுதல்
- கொடுக்கப்படும் சூழலையொட்டி நிகழ்வுக் கட்டுரையை ஆர்வமூட்டும் வகையிலும் சுயபடைப்புத்திறன்கொண்டும் எழுதுதல்
- சிறந்த மொழிநடையில் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்வளத்தையும் வாக்கிய வகைகளையும் கருத்திணைப்புக் குறிகளையும் பயன்படுத்திக் கட்டுரையை நிரல்பட எழுதுதல்

**எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- கருத்துக்களம், வலைப்பூ, மின்னஞ்சல் முதலான அமைப்புமுறையில் அமைந்த பனுவல்களைப் படித்துப் புரிந்துணர்வை வெளிப்படுத்துவதோடு கருத்துரையையும் எழுதுதல்
- பல்வேறு பனுவல்களைப் படித்துத் தம் கருத்துகளைக் கோவையாக எழுதுவதோடு பலதரப்பட்ட வாக்கிய வகைகளையும் பல்வகைச் சொல்லாட்சியையும் பயன்படுத்தி நிரல்பட எழுதுதல்

**இலக்கியத்திறன்கள்**

- இலக்கியப் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட நாவல், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவை உணர்த்தும் கருத்துகள், சிக்கல்கள் முதலானவற்றை அடையாளங்கண்டு அவற்றையொட்டிய தமது புரிந்துணர்வைத் தெளிவாகவும் தொடர்புபடவும் சுயபடைப்புத்திறனுடனும் நுண்ணாய்வுச் சிந்தனைத்திறனுடனும் வெளிப்படுத்துதல்
- இலக்கியப் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட இலக்கியப் பனுவல்களின் கதைக்கரு, கதைக்களம், கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு, மொழி ஆளுகை, தலைப்புப் பொருத்தம், படைப்பாளர் கையாண்டுள்ள உத்திகள் முதலான இலக்கியக்கூறுகளைப் பகுத்தாய்ந்து திறனாய்வு நோக்கில் கருத்துகள் எழுதுதல்
- இலக்கியப் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்படாத தற்காலக் கவிதைகளையும் சிறுகதைகளையும் ஆழ்ந்து படித்து அவற்றைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுதல்

## தேர்வு அமைப்புமுறை

உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியத் தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**வினாத்தாள் 1: கட்டுரை (மின்னியல் தேர்வு)**
**(1 மணி 15 நிமிடங்கள், 35 மதிப்பெண்கள், 17.5%)**
2026-ஆம் ஆண்டுமுதல் வினாத்தாள் 1 மின்னியல் தேர்வாக அமையும். தேர்வெழுதுவோர் ‘முரசு அஞ்சல்’ மென்பொருளைப் பயன்படுத்தித் தங்கள் கட்டுரையைத் தட்டச்சிட்டு அதை மின்னியல் தேர்வுத்தளத்தின்வழியே சமர்ப்பிப்பர். இவ்வினாத்தாளில் கொடுக்கப்படும் நான்கு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதன் விடையை 350 சொற்களுக்குக் குறையாமல் தட்டச்சிடவேண்டும். மூன்று கட்டுரைத் தலைப்புகளும் ஒரு கருத்து விளக்கப்படத்தை அடிப்படையாகக்கொண்ட தலைப்பும் இத்தாளில் இடம்பெறும். விடையளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம். பொருள், மொழி, அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுவோரின் படைப்பு மதிப்பிடப்படும்.

**வினாத்தாள் 2: கருத்தறிதலும் மொழிப் பயன்பாடும் (மின்னியல் தேர்வு)**
**(1 மணி 45 நிமிடங்கள், 65 மதிப்பெண்கள், 32.5%)**

இவ்வினாத்தாளில் ‘அ’, ‘ஆ’ ஆகிய பிரிவுகள் உள்ளன.

**‘அ’ பிரிவு (சுயவிடைக் கருத்தறிதல் 1)**

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியையொட்டி ஐந்து சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். அவற்றுள் ஒரு வினா சொற்பொருளையொட்டி அமையும். இவ்வினாக்களுக்கான விடைகளைப் பகுதியின் துணைகொண்டு கண்டறிந்து சொந்த நடையில் தட்டச்சுச் செய்யவேண்டும்.

**‘ஆ’ பிரிவு (சுயவிடைக் கருத்தறிதல் 2)**

இப்பிரிவில் இரண்டு உரைநடைப் பகுதிகள் கொடுக்கப்படும். அவற்றையொட்டி நான்கு சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். தேர்வெழுதுவோர் வினாக்களுக்குரிய விடைகளைக் கண்டறிந்து சொந்த நடையில் தட்டச்சுச் செய்யவேண்டும். அவற்றுள் ஒரு வினா இலக்கணக் கூறுகளையொட்டியும் மற்றொரு வினா கருத்துரை எழுதுதலையொட்டியும் அமையும். கருத்துரை எழுதுதலையொட்டி அமையும் வினாவுக்குத் தேர்வெழுதுவோர் 140 சொற்களுக்கு மிகாமல் தங்கள் விடையைத் தட்டச்சுச் செய்யவேண்டும்.

**வினாத்தாள் 3: இலக்கியம்**
**(3 மணி நேரம், 100 மதிப்பெண்கள், 50%)**

இவ்வினாத்தாள் ‘அ’, ‘ஆ’, ‘இ’, ‘ஈ’ ஆகிய பின்வரும் நான்கு பிரிவுகளை உள்ளடக்கியது. தேர்வெழுதுவோர் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து ஆக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதவேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும். இவ்வினாத்தாள் திறந்த புத்தக மதிப்பீட்டு முறையில் அமைந்துள்ளது.

**‘அ’ பிரிவு: நாவல், சிறுகதை**

இப்பிரிவில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் தேர்வெழுதுவோர் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து விடை எழுதவேண்டும். நாவலிலிருந்து ஒரு வினாவும் சிறுகதைகளிலிருந்து ஒரு வினாவும் கேட்கப்படலாம் அல்லது இரண்டு வினாக்களும் நாவலிலிருந்தோ சிறுகதைகளிலிருந்தோ கேட்கப்படலாம்.

**நாவல்:**
சமுதாய வீதி – நா.பார்த்தசாரதி

**சிறுகதைகள்:**
1. காஞ்சனை – புதுமைப்பித்தன்
2. விடியுமா? – கு.ப.ராஜகோபாலன்
3. கதவு – கி.ராஜநாராயணன்
4. தேடல் – நா.கோவிந்தசாமி
5. எண்ணங்கள் நிலையானவை அல்ல – மா.இளங்கண்ணன்
6. நாடோடிகள் – இராம.கண்ணபிரான்

**‘ஆ’ பிரிவு: கவிதை**

இப்பிரிவில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் தேர்வெழுதுவோர் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து விடை எழுதவேண்டும். மரபுக்கவிதைகளிலிருந்து ஒரு வினாவும் புதுக்கவிதைகளிலிருந்து ஒரு வினாவும் கேட்கப்படலாம் அல்லது இரண்டு வினாக்களும் மரபுக்கவிதைகளிலிருந்தோ புதுக்கவிதைகளிலிருந்தோ கேட்கப்படலாம்.

**கவிதைகள்:**
1. பழமொழி நானூறு

**நட்பின் இயலிலுள்ள நான்கு பாடல்கள்**

| | |
|---|---|
| இனியாரை யுற்ற இடர்தீர் உபாயம்<br>முனியார் செயினும் மொழியால் முடியா<br>துனியால் திரையுலாம் நூங்குநீர்ச்<br>சேர்ப்ப!<br>பனியால் குளநிறைத லில் | தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்<br>எந்தீமை யென்றே உணர்பதாம் – அந்தண்<br>பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச்<br>சேர்ப்ப!<br>ஒருவர் பொறையிருவர் நட்பு |
| தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப<br>ரெனப்பட்டார்க்<br>குற்ற குறையை உரைப்பதாம் - தெற்ற<br>அறையார் அணிவளையாய்! தீர்த<br>லுறுவார்<br>மறையார் மருத்துவர்க்கு நோய் | முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்<br>அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே<br>கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்<br>கெட்டார்க்கு நட்டாரோ இல் |

2. திருக்குறள்
    - ஆள்வினையுடைமை
    - சொல்வன்மை
    - வினைத்திட்பம்
3. தமிழ் – பாரதியார்
4. எந்நாளோ? – பாரதிதாசன்
5. ஆட்டனத்தி ஆதிமந்தி – கண்ணதாசன்
6. எறும்பு – ந.பழனிவேலு
7. இயற்கை இன்பம் – சிங்கை முகிலன்
8. இரவிலும் பகலை எதிர்பார் – அமலதாசன்
9. கல்லின் காயம் – அப்துல் ரகுமான்
10. மரம் – வைரமுத்து
11. ஹைக்கூ கவிதைகள்
    - கூண்டுக்கு விடுதலை (நா.முத்துக்குமார்)
    - குருவிக்கூடுகள், கடவுளைத்தேடி (ஏ.தேவராஜன்)
    - சோம்பல் மாணவன், எறும்புகள் வரும் நேரம் (ந.பச்சைபாலன்)

**‘இ’ பிரிவு: நாடகம்**

இப்பிரிவில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் தேர்வெழுதுவோர் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து விடை எழுதவேண்டும். ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ நாடகத்திலிருந்து ஒரு வினாவும் ‘ஊஞ்சல்’ நாடகத்திலிருந்து ஒரு வினாவும் கேட்கப்படலாம் அல்லது இரண்டு வினாக்களும் ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ நாடகத்திலிருந்தோ ‘ஊஞ்சல்’ நாடகத்திலிருந்தோ கேட்கப்படலாம்.

**நாடகங்கள்:**

1. சிங்கப்பூர் மாப்பிள்ளை – சே.வெ. சண்முகம்
2. ஊஞ்சல் – சுஜாதா

**‘ஈ’ பிரிவு: இலக்கியத் திறனாய்வு (பார்த்திராத பனுவல்கள்)**

இப்பிரிவில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் ஒரு வினா சிறுகதையையும் மற்றொரு வினா தற்காலக் கவிதையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். இவற்றுள் தேர்வெழுதுவோர் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து விடை எழுதவேண்டும். இவ்விரு வினாக்களில் பயன்படுத்தப்படும் பனுவல்கள் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்படாதவை. இலக்கிய நூல்கள், இதழ்கள், இணையம் முதலானவற்றில் இடம்பெறுகின்ற சிறுகதைகளும் தற்காலக் கவிதைகளும் தேர்வுக்கு உரியனவாக அமையும்.

கருத்துப் பொருத்தம், திறனாய்வு நோக்கில் ஆய்ந்தறிந்து கருத்துரைக்கும் திறன், கருத்துத் தொடர்ச்சி, தெளிவு, சுய படைப்புத் திறன், மொழிநடை முதலிய கூறுகளின் அடிப்படையில் விடைகள் மதிப்பிடப்படும்.

## தேர்வு விவர அட்டவணை

# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேனிலை உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் (9577)

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் (மதிப்பளவு) |
|---|---|---|---|---|
| **1**<br>**(மின்னியல் தேர்வு)**<br><br>(1 மணி 15 நிமிடங்கள்) | <u>கட்டுரை</u><br>(350 சொற்களுக்குக் குறையாமல்)<br><br>வகைகள்: நிகழ்வு, விளக்கம், கருத்துரைப்பு, விவாதம் | கட்டுரை | 4<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | 35<br>**(17.5%)** |
| **2**<br>**(மின்னியல் தேர்வு)**<br><br>(1 மணி 45 நிமிடங்கள்) | **<u>கருத்தறிதலும் மொழிப் பயன்பாடும்</u>**<br><br>**<u>'அ' பிரிவு</u>**<br>சுயவிடைக் கருத்தறிதல் 1<br>(சொற்பொருள் வினா உட்பட)<br><br>**<u>'ஆ' பிரிவு</u>**<br>சுயவிடைக் கருத்தறிதல் 2<br>(இலக்கண வினாவும் கருத்துரை எழுதுதல் வினாவும் உட்பட) | <br><br><br>சுயவிடை<br><br><br><br>சுயவிடை | <br><br><br>5<br><br><br><br>4 | 65<br>**(32.5%)**<br><br>32<br>(16%)<br><br>33<br>(16.5%) |
| **3**<br><br>(3 மணி நேரம்)) | **<u>இலக்கியம்</u>**<br><br>'அ' பிரிவு: நாவல்/சிறுகதை<br><br>'ஆ' பிரிவு: கவிதை<br><br>'இ' பிரிவு: நாடகம்<br><br>'ஈ' பிரிவு: இலக்கியத் திறனாய்வு (பார்த்திராத பனுவல்கள்) | சுயவிடை | 2<br><br>2<br><br>2<br><br>2<br><br>(ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினா என்னும் அடிப்படையில் மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளித்தல்) | **100**<br>**(50%)** |

# கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம்

**பொருள் (17 மதிப்பெண்கள்)**

| நிலை / விளக்கம் | வகை 1<br>14 - 17 | வகை 2 (மேனிலை)<br>11 - 13 | வகை 2 (கீழ்நிலை)<br>9 - 10 | வகை 3 (மேனிலை)<br>6 - 8 | வகை 3 (கீழ்நிலை)<br>4 - 5 | வகை 4<br>1 - 3 |
|---|---|---|---|---|---|---|
| **கருத்து வளம்** | ▪ சிறந்த கருத்துகளும் மிக விரிவான விளக்கமும் | ▪ பல நல்ல கருத்துகளும் பெரும்பாலும் விரிவான விளக்கமும் | ▪ போதுமான கருத்துகளும் ஓரளவு விரிவான விளக்கமும் | ▪ ஓரளவு போதுமான கருத்துகள் இருப்பினும் போதுமான கருத்து விளக்கம் இல்லாதிருத்தல் | ▪ குறைந்த அளவு கருத்துகளும் விளக்கமும் | ▪ மிகக் குறைந்த கருத்துகளும் தெளிவற்ற விளக்கமும் |
| **கருத்துப் பொருத்தம்** | ▪ முழுதும் பொருத்தமிக்கது<br>▪ மிகவும் கவரும் தன்மைமிக்கது<br>▪ சுய படைப்புத்திறன் மிக்கது | ▪ பெரும்பாலும் பொருத்தமிக்கது<br>▪ பெரும்பாலும் கவரும் தன்மையுடையது<br>▪ ஓரளவு சுய படைப்புத்திறன் கொண்டது | ▪ பொருத்தமிக்கது<br>▪ ஏற்புடையதாயினும் அவ்வளவாக ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது<br>▪ பெரும்பாலும் ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது<br>▪ ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ முழுதும் பொருத்தம் இல்லாதது |
| **கருத்து வளர்ச்சி** | ▪ மிகத் தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ போதுமான அளவு கருத்து வளர்ச்சி | ▪ கூறியது கூறல்; சில இடங்களில் கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ கூறியது கூறல் அதிகம் இடம்பெற்றிருத்தல்; கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ தெளிவற்ற, முரண்பட்ட, குழப்பமான கருத்துகள் |

**மொழியும் அமைப்புமுறையும் (18 மதிப்பெண்கள்)**

| நிலை / விளக்கம் | வகை 1<br>15 - 18 | வகை 2 (மேனிலை)<br>12 - 14 | வகை 2 (கீழ்நிலை)<br>10 - 11 | வகை 3 (மேனிலை)<br>7 - 9 | வகை 3 (கீழ்நிலை)<br>5 - 6 | வகை 4<br>1 - 4 |
|---|---|---|---|---|---|---|
| | ▪ மிகச் சிறந்த மொழித்திறன் | ▪ சிறந்த மொழித்திறன் | ▪ சராசரியான மொழித்திறன் | • சராசரியான மொழித்திறன் | ▪ மொழித்திறன் சராசரி நிலைக்குக்கீழ் இருத்தல் | ▪ மொழித்திறன் மோசமாக இருத்தல் |
| **இலக்கணம்** | ▪ பெரும் பிழைகள் இன்மை, மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் பல சிறு பிழைகள் | • பல பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் | ▪ பல பெரும் பிழைகள்; பிழைகளைத் தவிர்க்கும் பொருட்டு எளிய மொழிக்கூறுகளைப் பயன்படுத்துதல் | ▪ படித்துப் புரிந்துகொள்ள இயலாத அளவிற்குப் பெரும் பிழைகள் இருத்தல் |
| **சொல்லாட்சியும் வாக்கிய அமைப்பும்** | ▪ மிகப் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்லாட்சி<br>▪ மிகப் பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகளும் கருத்திணைப்புக் குறிகளும் | ▪ பொருத்தமான, பலதரப்பட்ட சொல்லாட்சி<br>▪ பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகளும் கருத்திணைப்புக் குறிகளும் | ▪ பொதுவாகப் பொருத்தமான சொல்லாட்சி<br>▪ பலதரப்பட்ட வாக்கிய வகைகள் | ▪ எளிய சொல்லாட்சி<br>▪ எளிய வாக்கிய அமைப்புகள் | ▪ மிக எளிய சொற்களைப் பயன்படுத்துதல்<br>▪ ஒரே வகையான சிறு வாக்கியங்கள் | ▪ மிக எளிய சொற்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல்<br>▪ வாக்கிய அமைப்பில் சிதைவு |
| **அமைப்புமுறை** | ▪ மிகச் சிறந்த பத்தியமைப்பும் | ▪ சிறந்த பத்தியமைப்பு | ▪ பொருத்தமான பத்தியமைப்பு | • ஓரளவு பொருத்தமான பத்தியமைப்பு | ▪ பத்தியமைத்து எழுதுவதில் இடர்ப்பாடு | ▪ பொருத்தமற்ற பத்தியமைப்பு |

## கருத்துரை எழுதுதல் மதிப்பீட்டுத் திட்டம்

| நிலை / விளக்கம் | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| **கருத்து** (10 மதிப்பெண்கள்) | **8-10** | **4-7** | **1-3** |
| ▪ **கருத்துப் பொருத்தம்** | ▪ முழுதும் பொருத்தமிக்கது | ▪ பெரும்பாலும் பொருத்தமிக்கது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது |
| ▪ **கருத்து விளக்கம்** | ▪ கருத்துகளை மிகப் பொருத்தமான சான்றுகளுடன் விளக்கி எழுதுதல் | ▪ கருத்துகளைப் பொருத்தமான சான்றுகளுடன் ஓரளவு விளக்கி எழுதுதல் | ▪ கருத்துகளை ஓரளவு பொருத்தமான சான்றுகளுடன் விளக்கி எழுதுவதில் முயற்சி இருத்தல் |
| ▪ **கருத்தின் அளவு** | ▪ போதுமான அளவு கருத்துகள் | ▪ ஓரளவு போதுமான அளவு கருத்துகள் | ▪ குறைந்த அளவிலான கருத்துகள் |
| **மொழி** (5 மதிப்பெண்கள்) | **4-5** | **3** | **1-2** |
| ▪ **மொழிப் பயன்பாடு** | ▪ பெரும் பிழைகள் இன்மை, மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், பல இடறல்கள் மற்றும் சிறு பிழைகள் |
| | ▪ மிகப் பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகள் | ▪ ஓரளவு பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகள் | ▪ எளிய வாக்கிய அமைப்புகள் |
| | ▪ மிகப் பொருத்தமான பல்வகைச் சொல்லாட்சி | ▪ ஓரளவு பொருத்தமான சொல்லாட்சி | ▪ எளிய சொல்லாட்சி |

# இலக்கியத்திற்குரிய மதிப்பீட்டுத் திட்டம்

**கருத்து (20 மதிப்பெண்கள்)**

| வகை | விளக்கம் |
|---|---|
| 1<br>(18 – 20 மதிப்பெண்கள்) | • விடையில் கருத்துப் பொருத்தம், அறிவு முதிர்ச்சி, கருத்துத் தெளிவு, கருத்து வளர்ச்சி ஆகியவை சிறப்பாக இருத்தல்<br>• விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்தித் திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைத்தல். அதில் சுய படைப்புத்திறனும் நுண்ணாய்வுச் சிந்தனைத்திறனும் வெளிப்படுதல்<br>• படைப்பாளர் கையாண்டிருக்கும் நடை, மொழி, கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம், கரு ஆகியவற்றை நன்கு அறிந்திருத்தல்<br>• விடைக்கேற்ற சான்றுகளையும் பொருத்தமான மேற்கோள்களையும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்துதல் |
| 2<br>(15 – 17 மதிப்பெண்கள்) | • விடையில் கருத்துப் பொருத்தம், அறிவு முதிர்ச்சி, கருத்துத் தெளிவு, கருத்து வளர்ச்சி ஆகியவை இருத்தல்<br>• விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்திப் பெரும்பாலும் திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைத்தல்<br>• படைப்பாளர் கையாண்டிருக்கும் நடை, மொழி, கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம், கரு ஆகியவற்றை அறிந்திருத்தல்<br>• விடைக்கேற்ற சான்றுகளையும் மேற்கோள்களையும் பொருத்தமாகப் பயன்படுத்துதல் |
| 3<br>(12 – 14 மதிப்பெண்கள்) | • விடையில் கருத்துப் பொருத்தம், அறிவு முதிர்ச்சி, கருத்துத் தெளிவு, கருத்து வளர்ச்சி ஆகியவை ஓரளவு இருத்தல்<br>• விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்தி ஓரளவு திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைத்தல்<br>• படைப்பாளர் கையாண்டிருக்கும் நடை, மொழி, கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம், கரு ஆகியவற்றை ஓரளவு அறிந்திருத்தல்<br>• சான்றுகளையும் மேற்கோள்களையும் பெரும்பாலும் பொருத்தமாகப் பயன்படுத்துதல் |

| வகை | விளக்கம் |
|---|---|
| 4<br>(8 – 11 மதிப்பெண்கள்) | • விடையில் கருத்துப் பொருத்தம், கருத்துத் தெளிவு, கருத்து வளர்ச்சி ஆகியவை ஓரளவு இருத்தல்<br>• விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்தித் திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைக்கும் ஆற்றல் குறைந்து காணப்படுதல். பெரும்பாலும் கருத்துகளை எடுத்துரைக்கும் முறையிலே விடை அமைந்திருத்தல்<br>• படைப்பாளர் கையாண்டிருக்கும் நடை, மொழி, கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம், கரு ஆகியவற்றை ஓரளவு அறிந்திருத்தல்<br>• சான்றுகளையும் மேற்கோள்களைப் பெரும்பாலும் பொருத்தமாகப் பயன்படுத்தினாலும் சில சமயங்களில் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துதல் |
| 5<br>(4 – 7 மதிப்பெண்கள்) | • சீராக அமையாத விடை. பனுவலோடு தொடர்புபடுத்தித் திறனாய்வு நோக்கில் கருத்துரைக்காது இருத்தல்<br>• முதலில் வினாவிற்கு ஏற்ப விடையைத் தொடங்கிப் பிறகு அதிலிருந்து விலகிச் செல்லுதல்<br>**அல்லது**<br>விடையை நன்கு ஆராய்ந்து எழுதாமல் கருத்துகளை மேலோட்டமாக எழுதுதல்<br>• கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம் மற்றும் கருப்பொருள் ஆகியவற்றை ஓரளவு அறிந்திருந்தாலும் அவற்றைப் பனுவலோடு தொடர்புபடுத்த அறியாதிருத்தல்<br>• ஒரு சில மேற்கோள்களைப் பயன்படுத்துதல் |
| 6<br>(1 – 3 மதிப்பெண்கள்) | • கருத்துகளைச் சுருக்கமாக, குறிப்புகள் முறையில் எழுதியிருத்தல்<br>• பனுவலை வினாவோடு தொடர்புபடுத்த முயன்றிருத்தல் |
| 7<br>(0 மதிப்பெண்) | • வினாவையொட்டி எந்தக் கருத்துகளும் இல்லாதிருத்தல்<br>• பனுவலோடு முற்றிலும் தொடர்புபடுத்தாதிருத்தல் அல்லது முற்றிலும் விலகியிருத்தல் |

**மொழிப் பயன்பாடு (5 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| 1<br><br>(4 – 5 மதிப்பெண்கள்) | • ஆழமான கருத்துகளை எளிமையாக விளக்கிக் கூறும் தன்மையும் சரளம் மிகுந்த நடையும்<br>• பெரும் பிழைகள் இன்மை, மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள்<br>• மிகப் பொருத்தமான பல்வகைச் சொல்லாட்சி |
| 2<br><br>(3 மதிப்பெண்கள்) | • வினாவைப் பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் பெரும்பாலும் தெளிவாக எடுத்துரைக்கும் நடை<br>• மிகச் சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் சிறு பிழைகள்<br>• பொருத்தமான சொல்லாட்சி |
| 3<br><br>(1 - 2 மதிப்பெண்கள்) | • மிகச் சாதாரண நடை<br>• பல பெரும் பிழைகள், பல இடறல்கள் மற்றும் பல சிறு பிழைகள்<br>• எளிய சொல்லாட்சி |